**I Additional District Court, Thoothukudi.**

**S.C.No.127/2022 நாள் : 17.02.2026 அ.சா.5– திருமதி. பேச்சியம்மாள்.**

**குறுக்கு விசாரணை :–**

எங்கள் வீட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் இடையில் சுமார் 5 கிமீ தூரம் இருக்குமா என்றால் கி.மீ கணக்கு தெரியாது. எங்கள் ஊரிலிருந்து ஓடைக்கரை, வீரபாண்டியபட்டிணம், அடைக்கலாபுரம் தாண்டிதான் சம்பவ இடத்திற்கு வரமுடியும் என்றால் சரிதான். ஆட்டோவில் வந்தால் சுமார் அரை மணிநேரத்தில் சம்பவ இடத்திற்கு வரமுடியும். நான் சம்பவ இடத்திற்கு போகும்போது என் கணவர் லெட்சுமணன் ரத்தக் காயங்களுடன் மல்லாந்த நிலையில் இருந்தார். என்னுடன் என் மகன் முத்துசெல்வனும் வந்தார். சம்பவ இடத்தில் நான் என் கணவரின் உடலை தூக்கினேன். கழுத்தில் ரத்தம் வந்து கொண்டிருந்தது. என்மீதும், என் உடையிலும் ரத்தம்பட்டது. அதைப் பார்த்து எனக்கு பதற்றமாகிவிட்டதால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் சம்பவ இடத்திற்கு போகும்போது போலீசார் இருந்தார்கள். போலீசார் என்ன நடந்தது என்று என்னிடம் விசாரித்தார்கள். போலீசார் என் வீட்டிற்கு வந்து என்னிடம் புகார் வாங்கினார்கள். நான் நடந்த சம்பவத்தை சொன்னேன். என்னுடன் என் மகன் வந்திருந்தார் என்பதை சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. ரத்தம்பட்ட என் உடைகளை போலீசார் வாங்கவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் அ.சா.4 எந்த தகவலும் எனக்கு சொல்லவில்லை என்றும், நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.17 17:24:27 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.
Prosecution witness for P.W. 7 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.ராஜ்குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

Accused absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காயல்பட்டிணத்தில் குடியிருந்து இருசக்கர வாகன மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். 2020ம் ஆண்டு பொங்கல் சமயத்தில் லெட்சுமணன் என்பவர் இறந்தது சம்பந்தமாக நான் திருச்செந்துார் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னிடம் சில வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அவற்றில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 4 மற்றும் 5**.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 16.01.2020 அன்று மதியம் 12 மணியளவில் போலீசார் நத்தகுளம் பேருந்து நிறுத்தம் அருகில் எதிரியை கைது செய்து

விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தபோதும் அதன் அடிப்படையில் எதிரி தான் உடுத்தியிருந்த ரத்தக்கறை படிந்த ஒரு சட்டை மற்றும் சாரம் ஆகியவற்றை ஆஜர் செய்யும்போது போலீசார் மகஜரில் கைப்பற்றும்போதும் நானும், சுடலை என்பவரும் உடனிருந்து அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.17 17:24:37 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.
Prosecution witness for P.W. 8 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுடலை. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

Accused absent. 317 Crpc petition filed.

முதல் விசாரணை

நான் தற்போது காயல்பட்டிணத்தில் குடியிருந்து இருசக்கர வாகன மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். 2020ம் ஆண்டு பொங்கல் சமயத்தில் லெட்சுமணன் என்பவர் இறந்தது சம்பந்தமாக நான் திருச்செந்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னிடம் சில வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அவற்றில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 6 மற்றும் 7**.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 16.01.2020 அன்று மதியம் 12 மணியளவில் போலீசார் நத்தகுளம் பேருந்து நிறுத்தம் அருகில் எதிரியை கைது செய்து

விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்தபோதும் அதன் அடிப்படையில் எதிரி தான் உடுத்தியிருந்த ரத்தக்கறை படிந்த ஒரு சட்டை மற்றும் சாரம் ஆகியவற்றை ஆஜர் செய்யும்போது போலீசார் மகஜரில் கைப்பற்றும்போதும் நானும், அ.சா.7ம் உடனிருந்து அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.17 17:24:44 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.
Prosecution witness for P.W. 9 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. செல்வலிங்கம்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

Accused absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வீரபாண்டியபட்டணம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 2020 ல் அதே கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது திருச்செந்தூர் காவல்நிலைய குற்ற எண் 10/2020 வழக்கின் சம்பவ இடமான அடைக்கலாபுரம் அரசு மதுபானக் கடையானது எங்கள் அலுவலக எல்லைக்குள் வீரபாண்டியபட்டணம் கிராம புல எண் 33 ல் அமைந்துள்ளதாக ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு சான்று வழங்கினேன். சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த அரசு மதுபானக் கடை வீரபாண்டியபட்டணம் கிராமப்புற ஊராட்சி எல்லைக்குட்பட்டது. அந்த பகுதி திருச்செந்தூர் காவல்நிலைய சரகத்திற்குட்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

புல எண் 33 ல் அரசு மதுபானக் கடை மற்றும் அதன் எதிரில் உள்ள கடை தவிர மற்ற இடங்கள் காலியாகத்தான் உள்ளன. அந்த புல எண்ணில் பிரதான சாலையிலிருந்து மண்பாதை உள்ளது. அந்த பாதை வருவாய்த்துறை ஆவணங்களில் காட்டப்படவில்லை.

மறு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.17 17:24:53 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.